<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – இணைக்கல்வித் தகுதி நிர்ணயம் - பத்தாம் வகுப்பிற்கு (SSLC) பின் மூன்றாண்டு பட்டயப்படிப்பு அல்லது இரண்டாண்டு தொழில் நுட்ப பயிற்சி (I.T.I) படித்த பிறகு மூன்றாண்டு பட்டப்படிப்பு படித்தவர்கள், பத்தாம் வகுப்பிற்கு (S.S.L.C) பின் மூன்றாண்டு பட்டயப்படிப்பு படித்த பிறகு இரண்டாண்டு பட்டப்படிப்பினை (Lateral Entry) படித்தவர்கள் மற்றும் பதினோராம் வகுப்பிற்கு (old SSLC) பின் இரண்டாண்டு ஆசிரியப் பட்டயப்படிப்பு படித்த பிறகு மூன்றாண்டு பட்டப்படிப்பு படித்தவர்கள் ஆகியோர் - பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பிற்கு (+2) பின் மூன்றாண்டு பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு இணையாக கருதி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பு / பதவி உயர்விற்கு அங்கீகரித்து - ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

<u>உயர்கல்வித் (பி1) துறை</u>

அரசாணை (நிலை) எண்.242

நாள்:18.12.2012
நந்தன, மார்கழி 3
திருவள்ளுவர் ஆண்டு, 2043

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசு கடித எண்.8849/பி1/2010–3, நாள் 06.10.2010
2. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நேர்முக கடித எண்.6354/வி.ம.து.ஊ1/2010, நாள் 05.12.2012
3. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண்.6804/வி.ம.து.ஊ1/2012, நாள் 08.12.2012

--------

<u>ஆணை:</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், பத்தாம் வகுப்பிற்குப் பின் பட்டயப்படிப்பு படித்து பின்பு, பி.இ. (B.E.) பட்டப் படிப்புகளில் நேரடி இரண்டாம் ஆண்டு படிப்பு முடித்த மாணவர்கள், +2 படித்து முடித்து, பி.இ. படித்த மாணவர்களுடன் சமமாகக் கருதப்பட்டு, உதவிப் பொறியாளர் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றனர் என்றும் மேலும், பத்தாம் வகுப்பு படித்து, பட்டயப் படிப்பிற்குப் பின் திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலமாக பட்டப்படிப்பு பெற்று, பல அரசு பணிகளில் ஏற்கனவே வேலையில் உள்ளவர்கள், பணிவரன்முறை செய்வது தொடர்பாக தனியர்கள் தொடர்ந்து அரசுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வருவதால், இப்பொருள் குறித்து தெளிவான அரசாணை வெளியிடுவதற்காக, 10ஆம் வகுப்பிற்கு பின்பு, மேல்நிலை பள்ளிப்படிப்பு (+2) படிக்காமல், பட்டயப்படிப்பு படித்து, பின்பு திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலமாக பட்டப்படிப்பு படித்துள்ளவர்களை, 10ஆம் வகுப்பு, மேல்நிலை வகுப்பு (+2) படித்து, பின்பு திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலமாக பட்டம் பெற்றவர்களுக்கு இணையாக வேலைவாய்ப்பிற்கு கருதலாமா என்ற பொருள் குறித்து இணைக் கல்வி நிர்ணயத் தகுதி குழுவில் பரிசீலித்து, அக்குழுவின் பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில், 03.12.2012 அன்று நடைபெற்ற இணைக் கல்வி தகுதி நிர்ணயக் குழுவின் 37வது கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், இத்தீர்மானத்தின் மீது அரசாணை வெளியிட ஆவன செய்யுமாறும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

<table>
<tr><th>பொருள்</th><th></th><th>கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்</th></tr>
<tr><td><u>தீர்மானம் எண்.2</u><br>பத்தாம் வகுப்பிற்கு (SSLC) பின்பு மூன்றாண்டு பட்டயப்படிப்பு படித்து பின் திறந்தவெளி பல்கலைக்கழகம், (Open University) தொலைதூரக் கல்வி நிறுவனம் (Distance Education) மற்றும் கல்லூரிகள் மூலம் பட்டப்படிப்பு முடித்தவர்கள் (10+3+3)</td><td rowspan="3">10ம் வகுப்பு மேல்நிலை (+2) வகுப்பு படிப்பு படித்து பின்பு இளங்கலை பட்டம் பெற்றவர்களுடன் இணையாகக் கருதி வேலைவாய்ப்பிற்காக / பதவி உயர்விற்காக அங்கீகரித்தல்</td><td>இணையானது (Equivalent)</td></tr>
<tr><td>பதினோராம் வகுப்பு (Old S.S.L.C) பின்பு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்ட இரண்டு வருட ஆசிரியப் பட்டயப்படிப்பு படித்து பிறகு தொலைதூரக் கல்வி நிறுவனம் மூலம் இளங்கலை (Open University) பட்டப்படிப்பு படித்தவர்கள் (11+2+3)</td><td>இணையானது (Equivalent)</td></tr>
<tr><td>பத்தாம் வகுப்பு, பிறகு இரண்டு வருட தொழில் நுட்ப பயிற்சி (I.T.I) படித்து விட்டு தொலைத்தூரக் கல்வி நிறுவனம் மூலம் இளங்கலை பட்டப்படிப்பு படித்தவர்கள். (10+2+3)</td><td>இணையானது (Equivalent)</td></tr>
<tr><td><u>தீர்மானம் எண்.4</u><br>பொதுப்பணிகள் – கல்வித்தகுதிகள் – பத்தாம் வகுப்பு + மூன்று வருட பட்டயப்படிப்பு பிறகு இரு வருட பட்டப்படிப்பினை (Lateral Entry) பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு (+2) பிறகு 3 வருட பட்டப்படிப்பிற்கு வேலைவாய்ப்பு (மற்றும்) பதவி உயர்வுக்காக இணையாக கருதுதல் .</td><td colspan="2">இணையானது (Equivalent)</td></tr>
</table>

3. மேலே பத்தி 2ல் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 37வது இணைக் கல்வி தகுதி நிர்ணயக் குழுவில் பரிந்துரைக்கப்பட்ட தீர்மானத்தினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, அதனை ஏற்று

(i) பத்தாம் வகுப்பிற்கு (SSLC) பின்பு மூன்றாண்டு பட்டயப்படிப்பு பின் திறந்தவெளி பல்கலைக்கழகம் (Open University) / தொலைதூரக் கல்வி நிறுவனம் (Distance Education) மற்றும் கல்லூரிகள் மூலம் பெறப்பட்ட பட்டப்படிப்பு (10+3+3);

(ii) பதினோராம் வகுப்பு (Old S.S.L.C) பின்பு அரசுத் தேர்வுகள் இயக்கத்தால் வழங்கப்பட்ட இரண்டாண்டு ஆசிரியப் பட்டயப்படிப்பு, பிறகு தொலைதூரக் கல்வி நிறுவனம் மூலம் இளங்கலை (Open University) பட்டப்படிப்பு **(11+2+3);**

(iii) பத்தாம் வகுப்பு, பிறகு இரண்டாண்டு தொழில் நுட்ப பயிற்சி (I.T.I), பின்னர் தொலைத்தூரக் கல்வி நிறுவனம் மூலம் இளங்கலை பட்டப்படிப்பு **(10+2+3)** மற்றும்

(iv) பத்தாம் வகுப்பு, மூன்றாண்டு பட்டயப்படிப்பு பிறகு இரண்டாண்டு பட்டப்படிப்பு (Lateral Entry) **(10+3+2)**

படித்தவர்களை பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு (+2) படித்து பிறகு **3** வருட இளங்கலைப் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு இணையாகக் கருதி பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு பெற அங்கீகரித்து ஆணையிடுகிறது .

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
அனைத்து துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
**<u>நகல்</u>**
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை**–9.**
அனைத்து பல்கலைக்கழகப் பதிவாளர்கள்.
அனைத்துத் துறைத் தலைவர்கள் (மாவட்ட ஆட்சியர்கள் உட்பட)
உயர்கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை**–9.**
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித்துறை, சென்னை**–9.**
உயர்கல்வித் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை-9.
உதிரி/இருப்புக்கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்